மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செங்கோட்டை
முன்னிலை திரு.எஸ்.இளையராஜா, எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், செங்கோட்டை
2025 ம் ஆண்டு ஜீன் திங்கள் 21 ம் நாள் சனிக் கிழமை
ஐ.ஏ.எண்.11/2025
இன்
அசல் வழக்கு எண்.118/2014
....

1. சுடலையாண்டி .....மனுதார்/ வாதி

/எதிர்/

1. மூக்கன் (இறப்பு)

2. செயல் அலுவலர்,
இலஞ்சி பேரூராட்சி, தென்காசி தாலுகா

3. தமிழக அரசு,
தென்காசி மாவட்ட ஆட்சி தலைவர் மூலம்,
தென்காசி மாவட்டம் ..... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது என் முன்பு விசாரணைக்கு வந்தபோது மனுதார்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எம்.கந்தசாமி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கே.முத்துக்குமாரசாமி அவர்கள் முன்னிலையாகியும், வரப்பெற்ற இம்மனுவில் இருதரப்பு வாதம் மற்றும் ஆவணங்களையும் ஆராய்ந்து பார்த்து இன்று இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும்....

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 7, விதி 14 மற்றும் 151 சி.பி.சி–யின் கீழ் மனுவில் கண்ட ஆவணத்தை வாதிகள் தரப்பு சான்றாவணமாக ஏற்றுக்கொள்ள அனுமதியளிக்க உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்:**

மனுதாரர், அசல் வழக்கில் பிராது இரண்டாம் தபசில் சொத்து மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என பிரதிவாதிகளுக்கு எதிரில் விளம்புகை செய்ய வேண்டியும்,

அதன் தொடர்ச்சியாக இரண்டாம் தபசில் சொத்தை மனுதாரர் அமைதியான முறையில் அனுபவித்து வருவதை எதிர்மனுதாரர்களோ, அவரது வகையாட்களோ, ஏவல் ஆட்களோ எந்தவகையிலும் யாதொரு இடையூறும் செய்யக்கூடாது என பிரதிவாதிகளுக்கு எதிரில் ஒரு நிரந்தர தடையாணை உத்தரவு வழங்கும்படிக்கும் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

மேற்படி அசல் வழக்கை தாக்கல் செய்த சமயத்தில் இம்மனுவில் கண்ட ஆவணங்கள் கிடைக்கப்பெறாத காரணத்தால் வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டதாகவும், எனவே மேற்படி வழக்கில் இத்துடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை மனுதாரர் தரப்பு சான்றாவணமாக ஏற்று உத்தரவிடவேண்டியது அவசியமாக உள்ளது. மனுவில் கண்ட ஆவணங்களை வழக்கு தாக்கல் செய்யும் சமயத்தில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாதது வேண்டுமென்றே ஏற்பட்ட தவறல்ல. அது மன்னிக்கப்பட வேண்டியதாயுள்ளது. எனவே மனுவில் கண்ட ஆவணத்தை வாதிகள் தரப்பு சான்றாவணமாக ஏற்று உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்.</u>**

மனுதாரரின் மனு சட்டப்படியும் நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதில்லை. மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் உண்மையில்லை. உண்மையில் மனுதாரர் தரப்பில் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் இவ்வழக்கிற்கு தேவையற்ற ஆவணங்களாகும். மேற்படி ஆவணங்கள் மனுதாரர் தரப்பில் சான்றாவணங்களாக குறியீடு செய்யத்தக்கதில்லை. மனுதாரர் தரப்பில் யாதொரு கட்சியும் இல்லை. மனுதாரர் நீதிமன்றத்தின் பொன்னான நேரத்தை வீணடிக்க இந்த வம்பு மனுவை தாக்கல் செய்துள்ளார். எனவே மனுதாரரின் மனுவை எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யக்கோரி குறிப்பிடப்பட்டுள்ளது.

4. **<u>பிரச்சனை:–</u>**

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதே இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை ஆகும்.

**5. <u>பிரச்சனைக்குரிய தீர்வு</u>**

**இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.**

மனுதாரர்/வாதி தரப்பில் தபசில் வழக்கில் 19.12.2014 ஆம் தேதியிட்ட சுடலையாண்டி பேரில் உள்ள ஏற்பாட்டு ஆவணத்தின் சார்பதிவாளர் நகலை வாதி தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்வதற்கு அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதேவேளையில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் மனுதாரர்/வாதி குறியீடு செய்ய கோரியுள்ள ஆவணம் இவ்வழக்கிற்கு தேவையற்ற ஆவணம் ஆகும் எனவும், இந்நீதிமன்ற நேரத்தை வீண் அடிப்பதற்காக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே மனுவை தள்ளுபடி செய்யக்கோரி குறிப்பிடப்பட்டுள்ளது.

இருதரப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளிலிருந்து அசல் வழக்கில் மனுதாரர்/வாதி 2ம் தபசில் சொத்து தனக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கேட்டும், அதன் தொடர்ச்சியாக பிரதிவாதிக்கு எதிராக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கானது பிரதிவாதிகள் தரப்பு விசாரணைக்காக நிலுவையில் உள்ள இந்நிலையில் மனுதாரர்/வாதி தரப்பில் 19.12.2014 தேதியிட்ட ஏற்பட்டு ஆவணத்தை கூடுதல் அவணமாக குறியீடு செய்யக்கோரி இம்மனு தாக்கல் செய்துள்ளார். மேற்படி ஆவணமானது குறியீடு செய்யப்படுவதால் மட்டுமே மேற்படி ஆவணத்தில் உள்ள சங்கதிகள் நிரூபிக்கப்பட்டதாக கருதமுடியாது. மேற்படி ஆவணங்களை பற்றியும், மேற்படி ஆவணத்தில் உள்ள சங்கதிகள்

பற்றியும் குறுக்குவிசாரணை செய்வதற்கு எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு வாய்ப்புள்ளது.

மேலும் இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதால், மனுதாரர்/வாதிக்கு ஒரு வாய்ப்பு அளித்து இம்மனுவை அனுமதிப்பதால், எதிர்மனுதாரர் /பிரதிவாதிக்கு எந்த வித கஷ்ட, நஷ்டமும் ஏற்படபோவதில்லை. எனவே நீதியின் நலனை கருத்தில் கொண்டு கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**6. <u>முடிவாக</u>**

(i) மனுதாரர்/வாதி வரும் 03.07.2025 ஆம் தேதிக்கு முன்போ, பின்போ செலவு தொகையாக எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு ரூபாய் 500/-யை செலுத்தும்பட்சத்தில், இம்மனு அனுமதிக்கப்படும் தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என உத்தரவிடப்படுகிறது.

(ii) அழைக்க 03.07.2025.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு செய்யப்பட்டு என்னால் படித்துப் பார்த்து பிழை திருத்தம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் இன்று 2025ம் ஆண்டு ஜீன் திங்கள் 21-ம் நாள் சனிக் கிழமை அவையறிய பகரப்பட்டது.

S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2025.06.21 15:32:03 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், செங்கோட்டை

**<u>மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி</u> :- இல்லை**

**மனுதாரர்/வாதி தரப்பு சாண்றாவணம்** :– இல்லை

**எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சாண்றாவணம்** :–இல்லை

S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2025.06.21 15:32:12 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
செங்கோட்டை.

மா.உ.நீ.ந. செங்கோட்டை
ஐ.ஏ. எண்.11/2025
(இன்)
ஓ.எஸ்.எண்.118/2014
உத்தரவு
நாள் 21.06.2025